**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் O.S.No.228/2018** **P.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.V.பிரதாப், என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | வீரராகவன் | தொழில் |
| த.பெ. | | மதம் |
| கிராமம் | | சாதி |
| வயது | | வட்டம் |

**முதல் விசாரணை - 03.04.2025**

நான் இந்த வழக்கின் வாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 1 முதல் 10 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை வாதிகள் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. வா.சா.ஆ.1 - 01.10.2015 தேதியிட்ட பிரதிவாதி அவரது சகோதரியுடன் ஏற்படுத்திக் கொண்ட மதுராந்தகம் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண்.6396/2015 அசல் பாகப்பிரிவினை பத்திரம்.

2. வா.சா.ஆ.2 - 01.10.2015 தேதியிட்ட மதுராந்தகம் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண்.6401/2015 வாதிக்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்த பதிவு செய்யப்பட்ட அசல் பொது அதிகார பத்திரம்.

3. வா.சா.ஆ.3 - 01.10.2015 தேதியிட்ட வாதிக்கு, பிரதிவாதி எழுதிக் கொடுத்த கிரய தொகை பெற்றுக் கொண்டதற்கான அசல் ரசீது.

4. வா.சா.ஆ.4 - 13.06.2018 தேதியிட்ட மதுராந்தகம் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண்.2087/2018 பிரதிவாதியால் சட்டவிரோதமாக ரத்து செய்யப்பட்ட பொது அதிகார பத்திரத்தின் ரத்து பத்திரம் சான்றிட்ட நகல்.

5. வா.சா.ஆ.5 - 13.06.2018 தேதியிட்ட பிரதிவாதி, வாதிக்கு அனுப்பிய அசல் கடிதம்.

6. வா.சா.ஆ.6 - 10.07.2018 தேதியிட்ட வாதி தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல்.

7. வா.சா.ஆ.7 - 18.07.2018 தேதியிட்ட வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டை.

8. வா.சா.ஆ.8 - சந்திரசேகர் நகர் மனை பிரிவிற்கான ஆன்லைன் வில்லங்க சான்றிதழ்.

9. வா.சா.ஆ.9 - குணசுந்தரியின் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் அசல் பாஸ் புத்தகம்.

10. வா.சா.ஆ.10 - புருஷோத்தமனின் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் அசல் பாஸ் புத்தகம்.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞா் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் மனை பிரிவுகள் வாங்கி, விற்கும் தொழில் செய்வதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். தனது நிலங்களை விற்பதற்காக பிரதிவாதி என்னிடம் அவரது ஆவணங்களை கொடுத்தார் என்றால் சரிதான். பிரதிவாதி எனக்கு 01.10.2015 அன்று ஒரு பொது அதிகார பத்திரத்தை எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். என்முன் காட்டப்படுவதுதான் பிரதிவாதி எனக்கு எழுதி கொடுத்த பொது அதிகார பத்திரமாகும். அவ்வாறு பொது அதிகார பத்திரம் எழுதும்போது பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததாக வாசகம் உள்ளதா என்றால் உள்ளது. அவ்வாறு நான் ரூ.32,63,000/- கொடுத்தேன். குறிப்பாக அந்த வாசகம் மேற்படி பொது அதிகார பத்திரத்தில் எந்த பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாட்சி மௌனம் சாதிக்கிறார். பொது அதிகார பத்திரத்தில் சொத்தை 3ம் நபருக்கு விற்றுவிட்டு பணத்தை பிரதிவாதிக்கு செலுத்த வேண்டுமென்று நிபந்தனை காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் மேற்படி பொதுஅதிகார பத்திரத்தின் அடிப்படையில் சொத்தை கிரயம் பெற்றேனா என்றால் நான் கிரயம் வாங்கவில்லை. பவர் பத்திரம் மட்டும் வாங்கியுள்ளேன். நான் பணத்தை எதற்காக பிரதிவாதிக்கு கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் பணம் கொடுத்த பவர் வாங்கி விட்டால் உடனடியாக நிலத்தை விற்று விடலாம' என்பதற்காக பணம' கொடுத்ததாக சொல்லியுள்ளேன். நான் முத்திரை தாளை மிச்சம் பிடிப்பதற்காக நேரடியாக கிரய பத்திரம் எழுதவில்லை என்றால் அவ்வாறு இல்லை. பொது அதிகார பத்திரத்தின் பேரில் நான் யாருக்கு விற்றேன் என்றால் விற்பதற்குள் அவர் அதிகார பத்திரத்தை ரத்து செய்து விட்டார். நான் கிரயம் வாங்குவதற்குதான் பணம் கொடுத்தேன். பவர் பத்திரம் வாங்கிய அன்றே பிரதிவாதிக்கு பணம் கொடுத்தேன். நான் வா.சா.ஆ.3 ரசீதை முத்திரை தாளை குறைப்பதற்காக எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. நான் பிரதிவாதிக்கு எந்த தொகையும் செலுத்தவில்லை என்றும், முத்திரை தீர்வை செலுத்துவதை தவிர்ப்பதற்காக வா.சா.ஆ.3 யை தயார் செய்தேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு தொகையை பணமாக செலுத்தினேன். குறிப்பாக நான் ரூ.1000, ரூ.2000, ரூ.500. ரூ.200 தாளக்ளில்

கொடுத்தேனா என்றால் எல்லா ரூபாய் தாள்களில் கலந்து கொடுத்தேன். ஒவ்வொரு ரூபாய் தாள்களிலும் எவ்வளவு கொடுத்தேன் என்று ஞாபகம் உள்ளதா என்றால் ஞாபகமில்லை. நான் குறிப்பிடும் ரூபாய் தாள்கள் பொது அதிகார பத்திரம் எழுதப்பட்ட காலத்தில் நடைமுறையில் புழக்கத்தில் இல்லை என்றால் சரியல்ல. என் பொது அதிகார பத்திரம் ரத்து செய்யப்பட்டு வருவாய் ஆவணங்கள் பிரதிவாதியின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிதான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் நான் அனுபவித்து வருகிறேன். எனது அனுபவத்தை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனது பொது அதிகார பத்திரத்தை பிரதிவாதி நீக்கரவு செய்து விட்ட நிலையில் அவரது பத்திரங்களை பிரதிவாதிக்கு நான் திரும்ப செலுத்த கடமை பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு எழுதிக் கொடுத்த பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்துவிட்ட நிலையில் இவ்வழக்கை தாக்கல் செய்ய எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு பிரதிவாதியின் எதிர் கோரிக்கை பரிகாரம் அனுமதிக்கப்பட வேண்டுமென்றால் சரியல்ல. என் தரப்பு ஆவணங்கள் வழக்கிற்காக பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை